சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

Case No.OS.57/2024

**2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 08 ம் நாள் புதன்கிழமை**

வாதித்தரப்பு சாட்சியாகிய வா.சா.2 இன் வாக்குமூலம் ஆக்ட் 10/1873 ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திரு.வ.சிவக்குமார், எழுத்தர் நிலை-II என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முனிதாஸ் | தொழில் | விவசாயம் |
| தந்தை பெயர் | ராமசாமி | ஜாதி | |
| கிராமம் | மோட்டூர் | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | 45 |

**08.10.2025 முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 2 வது சாட்சி ஆவேன். என் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறன். ஆதார் அட்டை நகல் அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டது. பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றி முழு விவரம் எனக்கு தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். வா.சா.ஆ.1 ல் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த வா.சா.ஆ.1 ல் உள்ள வா.சா.2 ன் சாட்சி கையொப்பம் **வா.சா.ஆ.4 ஆக** குறியீடு செய்யப்படுகின்றது.